10/=

பக்கங்கள் 06

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி
Ethiroli

குரல் 01 | அதிர்வு 115 | திங்கட்கிழமை செப்ரெம்பர் 11 2017 | ethirolim[illegible]il.com | 021 300 48 48

## 20 ஆவது திருத்தம் இல் விவாதம்


உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பான 20ஆம் திருத்தம் எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. குறித்த இந்த சட்டமூலம் தொடர்பிலான உயர்நீதிமன்ற அறிக்கை எதிர்வரும் வாரத்தில் கிடைக்கும் எனத் தெரிவிக்கப்படுவதோடு, இதற்கமைய குறித்த சட்டமூலம் எதிர்வரும் 20 ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ளதாகவும் அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சட்டமூலத்துக்கு 06



## விடுதலைப் புலிகளே குற்றவாளிகளாம் !

போர்க்குற்றங்களுக்காகச் சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தப்பட வேண்டியவர்கள் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களே தவிர, தாய்நாட்டை விடுவிப்பதற்காகச் சண்டையிட்ட போர் வீரர்களையல்ல என்று வீடமைப்பு மற்றும் கட்டுமானத்துறை அமைச்சர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். திம்புலாகலவில், நேற்றுமுன்தினம் நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய அவர், “எமது போர் வீரர்கள் போர்க்குற்றங்களை இழைத்தார்கள் என்று சிலர் கூறுகின்றனர். அவர்கள் எவருமே அப்படியான குற்றங்களைப் புரியவில்லை. விடுதலைப் புலிகள் மட்டும் தான் போர்க்குற்றங்களை இழைத்தார்கள். பாதுகாப்புப் படையினர், மூன்று தசாப்த காலப் போரை முடித்து வைத்து, அமைதியை உருவாக்கினார்கள். 06




## முதல்வருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு எதிராக, நம்பிக்கையில்லாப் பிரேரணையை கையளிப்பதற்கு, உறுப்பினர்கள் சிலர் நடவடிக்கை எடுத்துவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. குறித்த நம்பிக்கையில்லாப் பிரேரணைத் திட்டம் தொடர்பில் மிக இரகசியம் பேணப்பட்டு நடவடிக்கைகள் பேணப்பட்டுவந்தன. எனினும் பிரேரணைக்கு போதியளவு உறுப்பினர்களின் ஆதரவின்மையால் முதலமைச்சர் சார்பு உறுப்பினர்களின் ஆதரவு கோரப்பட்டுள்ளது. அவர்களில் ஒருவர் மூலமே இந்தத் தகவல் வெளிக்கசிந்ததாகத் தெரியவருகின்றது.

மாகாண சபையில் முன்வைக்கப்படுகின்ற யோசனைகளை ஒத்திவைப்பதனால், மாகாண சபையில் பிரச்சினையான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என்றும், 06

## பூநகரியில் ஹயஸ் குத்துக்கரணம்

### ஒருவர் பலி



பூநகரி - பரந்தன் வீதியில் இன்று காலை 06.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார். வீதி ஓரத்தில் பயணித்த பெண் ஒருவர் மீதே ஹயஸ் வாகனம் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது ஹயஸ் வாகனம் தடம் புண்டு குத்துக்கரணமடித்தது. விபத்தில் படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார். இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் சிவகுமார் ஜெகதம்பாள் (வயது-47) என்ற இரு பிள்ளைகளின் தாய் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குறித்த பெண் வீட்டிலிருந்து புறப்பட்டு வீதிக்கு வந்தபோது கொழும்பிலிருந்து வந்த ஹயஸ் வாகனம் வேகம் 06

## ஐ.நா. தடையை மீறிய இலங்கை

வடகொரியாவுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள ஐ.நாவின் பொருளாதாரத் தடையை, இலங்கை உள்ளிட்ட சில நாடுகள்மீறியிருப்பதாக, ஐ.நா. குற்றம் சாட்டியுள்ளது. வடகொரியா மீது கடந்த ஆண்டு செப்ரெம்பர் 05ஆம் திகதி விதிக்கப்பட்ட பொருளாதாரத்தடைகளைக்கண்காணிக்க நியமிக்கப்பட்ட ஐ.நா.வின் ஏற்றுமதிக் கண்காணிப்பு நிபுணர்கள் ஐ.நாவுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையிலேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. கடந்த ஆறு மாதகாலத்தில், இலங்கை, சீனா, இந்தியா, மலேசியா உள்ளிட்ட நாடுகளுக்கு, ஐ.நாவின் தடைகளை மீறி வடகொரியா, 270 மில்லியன் டொலர் பெறுமதியான, நிலக்கரி, இரும்பு மற்றும் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இலங்கை மாத்திரம், 1,860,516 டொலர் பெறுமதியான உருக்கு மற்றும் இரும்புகளை இறக்குமதி செய்துள்ளது. இதைவிட, வடகொரியாவுக்காக கடற்படைக் கப்பல்களை நவீனப்படுத்தும், கிறீன் பைன் என்ற நிறுவனத்தின் இரண்டு பிரதிநிதிகள், இலங்கை வந்து கப்பல்களை விற்க முயற்சித்ததாகவும், இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இவை ஐ.நாவின் தடைகளை மீறும் செயல் என்று ஐ.நா. அறிக்கை கூறியுள்ளது. (எ)



இன்று காலை புத்தூர் சந்தியில் ‘படி’ ரக வாகனம் ஒன்றும் சைக்கிளும் விபத்துக்குள்ளானது. இதில், சைக்கிளை ஓட்டிச் சென்ற முதியவர் ஒருவர் காயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (உ–32)

## அரசாங்கம் இரட்டைத் துரோகம்



அரசாங்கம் நாட்டு மக்களை ஏமாற்றி இரட்டைத் துரோகம் இழைத்துவருவதாக பொது எதிரணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குறிப்பிட்டுள்ளார். களுத்துறையில் இன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர்,

“இந்த அரசாங்கம் 06

## வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகள் எண்ண முடிவு



உள்ளூராட்சித் தேர்தலின் போது, வாக்களிப்பு நிலையத்திலேயே வாக்குகளை எண்ணும் நடவடிக்கைகளை மேற்கொள்ள தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு செய்துள்ளது. வாக்குகளை எண்ணும் பணியைத் திறமையாக முன்னெடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

வாக்குகளை எண்ணும் பணிக்குத் தேவையான வசதிகளைக் கொண்டதாக வாக்களிப்பு நிலையங்களை அமைப்பதற்கு அனுமதியளிக்கும் வகையில் புதிய தேர்தல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கடினமான பகுதிகளில் மாத்திரம், பல வாக்களிப்பு நிலையங்களை ஒருங்கிணைக்கவும், ஒரு இடத்தில் வாக்குகளை எண்ணவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 06

# எட்டு மாத விபத்துக்களில் 1800 பேர் மரணம்

கடந்த எட்டு மாத காலப்பகுதியில் வாகன விபத்துக்களினால் 1800 பேர் வரையில் உயிரிழந்துள்ளதாக வீதிப் பாதுகாப்பு குறித்த தேசிய சபையின் தலைவர் டாக்டர் சிசிர கோதாகொட தெரிவித்துள்ளார்.

இந்தக் காலப் பகுதியில் இடம்பெற்ற உயிராபத்தை ஏற்படுத்தக் கூடிய பாரிய வாகன விபத்துக்களின் மொத்த எண்ணிக்கை 1708 ஆகும். வாகன விபத்துக்களில் அதிகளவில் பாதசாரிகளும், மோட்டார் சைக்கிள்களில் செல்வோருமே உயிரிழந்துள்ளனர். குறிப்பாக கடந்த எட்டு மாத காலப் பகுதியில் 533 பாதசாரிகளும், 586 மோட்டார் சைக்கிளில் பயணித்தோரும் உயிரிழந்துள்ளனர்.

அதேவேளை, வாகன விபத்துக்களினால் 142 சாரதிகள் உயிரிழந்துள்ளனர். இந்தக் காலப்பகுதியில் 233 முச்சக்கர வண்டி விபத்துக்கள் இடம்பெற்றுள்ளதுடன் இதில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 214 ஆகும். நாள் தோறும் சராசரியாக வீதி விபத்துக்களில் 8 பேர் உயிரிழப்பதுடன் 20 பேர் வரையில் காயமடைகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார். (உ)

# கிணற்றில் விழுந்த குழந்தை மரணம்



அம்பன்பொல - தெமடவெவ பகுதியில் நேற்று கிணற்றில் விழுந்து சிறு குழந்தையொன்று உயிரிழந்துள்ளது.

பயிர்ச் செய்கைக்காக அமைக்கப்பட்ட கிணற்றிலேயே இந்தக் குழந்தை விழுந்துள்ளது. இதனையடுத்து, மூன்றரை வயதான அந்தக்குழந்தையை மீட்ட பிரதேச மக்கள் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். எனினும், சிகிச்சை பலனின்றி அக் குழந்தை மரணமடைந்துள்ளது. சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ)

# லலித், அனுஷவின் தீர்ப்புக்கு எதிராக மேன் முறையீடு





முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் செயலாளராக இருந்த லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் அனுஷ பல்பிட்ட ஆகியோருக்கு, எதிராக வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை எதிர்த்து, இன்றுமுதல் பல்வேறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி அறிவித்துள்ளது.

அதனடிப்படையில், ஜனாதிபதி சட்டத்தரணி காலிங்க இந்திரதிஸ்ஸவினால், மேன்முறையீட்டு மனுவொன்று இன்று தாக்கல் செய்யப்படுவதாக ஒன்றிணைந்த எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை, அவ்விருவருக்கும் எதிராக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்கவால் வழங்கப்பட்ட தீர்ப்பில், இருவரும் தலா ஐந்து மில்லியன் ரூபாய் வீதம் 10 மில்லியன் ரூபாயை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவுக்கு, நட்டஈடாகச் செப்டெம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகையால், நட்டஈட்டுத் தொகையை திரட்டுவதற்கு, ஒன்றிணைந்த எதிர்க்கட்சி நாடளாவிய ரீதியில், பேரணிகளையும் பிரசார கூட்டங்களையும் நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. (உ)

# பாரதியாரின் 95 ஆவது தினம்






மஹாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 95ஆவது நினைவு தினம் இன்று யாழ். நல்லூரில் நினைவுகூரப்பட்டது. நல்லூரில் அமைந்துள்ள அவரது உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்வுக்கு இந்தியத் துணைத்தூதுவர் அ.நடராஜன்,நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சின்மய மிஷன் ஜாக்கிரத சைதன்ய சுவாமிகள், பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா,கலாநிதி ஆறு.திருமுருகன், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையின் உப அதிபர் ச.லலீசன் மற்றும் பெரியார்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (உ–04)

# வீதியோரத்தில் தேங்கும் குப்பைகள்



யாழ்ப்பாணம் இராசாவின் தோட்ட வீதியில் உள்ள அருள் மாதா சனசமூக நிலைய முன்றலிலும் அதனை அண்டிய பகுதியில் வீதி ஓரமாகவும் குப்பைகள் தேங்கிக் காணப்படுகின்றன.

இதனால் குடிமனைகள் நிரம்பிய குறித்த பகுதியில் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. மழை காரணமாக நுளம்புப் பெருக்கம் ஏற்பட்டு காணப்படுவதுடன் துர்நாற்றம் வீசுவதாகவும் தெரிவித்துள்ளனர். வீதிகளில் காணப்படும் குப்பைகள் நாய்கள் மற்றும் காற்றினால் வீதிகளில் பரவுவதாகவும் அதிகளவில் பொலித்தீன் குப்பைகளே தேங்கிக் காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மாநகரசபையினர் இக் குப்பைகளை அகற்றி பிரதேச மக்களைச் சுகாதார சீர்கேட்டில் இருந்து காப்பாற்றுமாறும் கேட்டுக் கொண்டுள்ளனர். (உ)

# பாம்பு வைத்தியருக்கு 60 ஆயிரம் அபராதம்

எவ்விதமான அனுமதிப் பத்திரங்களும் இன்றி, எட்டுப் பாம்புகளைப் பிடித்து வைத்திருந்த வைத்தியர் ஒருவருக்கு, மாத்தறை நீதவான் நீதிமன்ற நீதவான், 60 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளார்.

வன விலங்குகள் பாதுகாப்பு அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களை அடுத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது மாத்தறை , மிரிஜ்ஜவில பகுதியில் வசித்து வந்த அந்த வைத்தியர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட, நபரான வைத்தியர், எட்டுப் பாம்புகளைச் சிறைப் பிடித்து, தனது வீட்டில் வைத்துள்ளார் என்றும், அவற்றை வெளிநாட்டவர்களுக்குக் காண்பித்து பணம் சம்பாதித்து வந்ததாகவும் தெரியவருகின்றது.

வன விலங்குகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதியின்றி இவ்வாறு பாம்புகளைத் தன்வசம் வைத்திருந்தது சட்ட விரோதமான செயலென்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (உ)

# லக்சபானா வான்கதவு திறப்பு



மலையகத்தில் தொடரும் மழையினால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. இதன்காரணமாக லக்சபானா மற்றும் கெனியன் நீர்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதாக மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கெனியன் நீர்தேக்கத்தில் இரண்டு வான்கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளதுடன் லக்சபானா நீர்த்தேக்கத்தின் 1 வான் கதவு திறந்து விடப்பட்டுள்ளதாக லக்ஷபான மின்சார சபை அதிகாரிகள் தெரிவித்தனர். களனி ஆற்றை அண்டிய பிரதேச மக்கள் அவதானத்துடன் இருக்குமாறு அதிகாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். மஸ்கெலியா - மவுசாக்கலை நீர்தேக்கத்துடன் கலக்கும் மொக்கா நீர்வீழ்ச்சி பெருக்கெடுத்துள்ளதால், மவுசாக்கலை நீர்தேக்கத்தின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. (உ)


# பாலியல் துஷ்பிரயோகம் என போலி முறைப்பாடு: மாணவி கைது

மோட்டார்சைக்கிளில்வந்த நபர்தன்னைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக போலி முறைப்பாடு செய்த மாணவி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முறைப்பாட்டின்போது அவர் தன்னிடமிருந்த தங்க சங்கிலி மற்றும் பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டதாகவும் முறைப்பாடு செய்திருந்தார்.

கடத்தப்பட்டதாக கூறப்பட்ட தினத்திலிருந்து மூன்று நாட்களின் பின்னர் அந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் தன்னைக் கடத்தியவர்கள் யார் என தனக்குத் தெரியாதெனவும் ஓரிடத்தில் வைத்து தன்னைத் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாகவும் முறைப்பாட்டில் குறிப்பிடப்பிட்டிருந்தார். அதற்கமைய பொலிஸார் மாணவி கூறிய இடத்தில் உள்ள சீ.சீ.டீ.வி காணொளியைச் சோதனையிட்டுள்ளனர். எனினும் மாணவியால் கூறப்பட்ட விடயங்களை உறுதி செய்யப்படவில்லை. இதன் காரணமாக மாணவியின் நண்பர்கள் சிலரிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். அங்கு எவ்வித கடத்தல் சம்பவம் அல்லது, வகுப்புகள் நடத்தப்படவில்லை எனவும், தனது காதலனுடன் பயாகல கடற்கரைக்கும் சில இடங்களுக்கு அவர் சென்றுள்ளமையும் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் திருடப்பட்டதாகக் கூறப்பட்ட இசைக் கருவி மாணவியின் நண்பியின் வீட்டில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காதலனின் அத்தையிடம் இருந்து தொலைபேசி மீட்கப்பட்டுள்ளதுடன், மாணவியின் தங்கச் சங்கிலி அலுமாரி ஆடைகளுக்குள் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காதலனுடன் சென்ற பயணத்தை வீட்டில் மறைப்பதற்கே தான் இவ்வாறு போலி முறைப்பாடு செய்ததாக மாணவி குறிப்பிட்டுள்ளார். (உ)

# 3 லட்சம் ரோஹிங்கியர்கள் பங்களாதேஷில்!



மியான்மரின் ராக்கைன் மாகாணத்தில் ஏற்பட்டுள்ள வன்முறை காரணமாக 15 நாட்களில் 3 லட்சம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.
ராக்கைன் மாகாணத்தில் ரோஹிங்கியா முஸ்லிம்களுக்கும் பௌத்த மதத்தினருக்கும் இடையே கடந்த ஆண்டு ஒக்ரோபரில் மோதல் வெடித்தது. இதில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர். பின்னர் வன்முறைகட்டுப்பாட் டுக்குள் கொண்டுவரப்பட்டது.
இந்தநிலையில் கடந்த மாதம் 25ஆம் திகதி மீண்டும் மோதல் வெடித்தது.
முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைக்கு இராணுவமும் துணை நிற்பதாகக் குற்றச்சாட்டு எழுந்துள்ளது. பல கிராமங்கள் தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளன.
இதில் நூற்றுக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவத்துக்கு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.
தொடரும் வன்முறை காரணமாக, ரோஹிங்கியா முஸ்லிம்கள் அங்கிருந்து வெளியேறி பக்கத்து நாடான பங்களாதேஷில் குடியேறி வருகின்றனர்.
இதுகுறித்து ஐ.நா.அகதிகள் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜோசப் திரிபுரா நேற்று கூறும்போது, “ஓகஸ்ட் 25-ஆம் திகதியிலிருந்து இதுவரை 3லட்சம் ரோஹிங்கியா முஸ்லிம்கள் பங்களாதேஷில் அகதிகளாகத் தஞ்சமடைந்துள் ளனர்” என்றார்.
பங்களாதேஷை நோக்கி மேலும் அகதிகள் வந்து கொண்டே இருப்பதால், அவர்களுக்கு உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதில் பெரும் நெருக்கடி நிலை தோன்றியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (இ)

## பிரசவ வலியால் பெண் தற்கொலை

சீனாவில் பிரசவலியைத் தாங்க முடியாததால், சத்திர சிகிச்சைக் கூட ஜன்னல் வழியாகப் பாய்ந்து, கர்ப்பிணி ஒருவர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.
சீனாவில் உள்ள சேன்ஸ்கி மாகாணத்தைச் சேர்ந்த இளம்பெண் ஒருவர் பிரசவத்துக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்த நிலையில் குழந்தையின் தலை பெரிதாக இருந்த காரணத்தினால் சுகப்பிரசவம் மூலம் குழந்தையைப் பெற்றெடுப்பது மிகவும் கடினம் என மருத்துவர்கள் தெரிவித்தனர். மேலும் உடனடியாக அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் எனக் கூறி அந்தப் பெண்ணின் கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்களிடம் கையெழுத்து வாங்கினர். ஆனால் அந்தப் பெண்ணின் கணவர் தனது மனைவிக்கு அறுவை சிகிச்சை வேண்டாம் சுகப்பிரசவம் மூலமே குழந்தை பிறக்க ஏற்பாடு செய்யுங்கள் எனக்கூறி கையெழுத்திட மறுத்துள்ளார்.
இந்தநிலையில் பிரசவ சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு இருந்த அந்தப் பெண் பிரசவ வலியைப் பொறுத்துக்கொள்ள இயலாது எனக் கூறி, சத்திர சிகிச்சைக் கூட ஜன்னல் வழியே வெளியே குதித்து தற்கொலை செய்து கொண்டார். அவரது வயிற்றில் இருந்த குழந்தையும் இறந்து விட்டது. (இ)

## அமெரிக்கா நோக்கி ஆவேசத்தோடு ‘இர்மா’!




அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை அடுத்துள்ள புளோரிடாத் தீவுக்கூட்டத்தை இர்மா புயல் தாக்கியுள்ளது.கரீபியன் தீவுகளில் கோரத்தாண்டவம் ஆடிய இர்மா புயல் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரைப் பகுதியை நோக்கித் தற்போது நகர்ந்து வருகிறது.
புளோரிடா மாகாணத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள புளோரிடா கீஸ் தீவுக்கூட்டத்தை இர்மா புயல் தாக்கியதாக அமெரிக்காவின் தேசிய புயல் மையம் அறிவித்துள்ளது.
அப்போது காற்று அதிகபட்சமாக மணிக்கு 210 கி.மீ. வேகத்தில் வீசியதாகவும், வடகிழக்குத் திசையில் மணிக்கு 13 கி.மீ. வேகத்தில் நகர்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.புயல் எச்சரிக்கை காரணமாக புளோரிடா மாகாணத்தில் உள்ள 50 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டுள்ளனர்.
காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுவதால் 10 லட்சத்துக்கும் மேற்பட்டோர் மின்சார வசதியின்றி தவித்து வருகின்றனர்.
இர்மா புயலின் தாக்கத்தால் பஹாமஸ் தீவுப்பகுதியில் கடல் உள்வாங்கியது. இதனால், சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படுமோ என்று மக்கள் அச்சமடைந்திருந்த நிலையில், சிலமணி நேரங்களுக்குப் பிறகு கடல் நீர் இயல்பு நிலைக்குத் திரும்பியது.(இ)

## அஸ்பிரினின் ஆச்சரியம்: பற்சூத்தைக்கும் நிவாரணி


பற்சூத்தையின் பாதிப்புக்களை ‘அஸ்பிரின்’ மாத்திரை மூலம் மாற்ற முடியும் என்றும், அந்தப் பற்சூத்தையை சரிசெய்யும்சிகிச்சையான “நிரப்புதலை” நம்முடைய பல்லாலேயே செய்துவிட முடியும் என்றும் வட அயர்லாந்தின் பெல்ஃபாஸ்ட் நகர விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.
அஸ்பிரின் மாத்திரையானது, பற்சூத்தைப் பகுதியில் குணமாக்குதலை மேம்படுத்தி, பல்லிலுள்ள குருத்தணுக்களை (ஸ்டெம் செல்) தூண்டுவதாக குயின்ஸ் பல்கலைக் கழகத்தின் ஆய்வில் தெரிய வந்துள்ளது.
பல்லில் வரக்கூடிய பொதுவான நோயான பற்சூத்தை, பல் நாளங்களில் வீக்கம் ஏற்படச் செய்து பல் வலியை உருவாக்குகிறது.வலி நிவாரணியாக பல ஆண்டுகளாகப் பயன்படுத்தப்பட்டு வரும் மாத்திரை தான் அஸ்பிரின் (அசிட்டிலசிலிசிலிக் அமிலம் அடங்கியது) வீக்கத்தை தடுக்கின்ற மருத்துவ குணமுள்ளது. தலை வலி, மாதவிடாய் வலி, தசை வலி போன்றவைகளில் இருந்து விடுபடுவதற்கு இது பயன்படுத்தப்பட்டு வருகின்றது.தற்போது இது பற்சூத்தையை இயல்பாகவே மாற்றும்ஆற்றல் கொண்டது எனக் கண்டறியப்பட்டுள்ளது. இதனால் பற்சிகிச்சைக்கான செலவுகள் குறைவதோடு, விரைவாகவே பற்சூத்தையைக் குணமாக்கும் வசதியும் ஏற்பட்டுள்ளது என அயர்லாந்து விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.(இ)

## பொது நிகழ்வில் காதலியுடன் ஹரி



கனடாவில் நடைபெறவிருக்கும் விளையாட்டு நிகழ்ச்சி ஒன்றில் இங்கிலாந்து இளவரசர் ஹரியும், அவரது காதலியும், அமெரிக்க நடிகையுமான மேகனும் ஒன்றாகக் கலந்து கொள்வார்கள் எனத் தகவல் வெளியாகியுள்ளது.
இளவரசர் ஹரியும், அமெரிக்க நடிகை மேகனும் கடந்த ஒரு வருடமாகக் காதலித்து வருகிறார்கள். ஆயினும் தங்கள் காதல் குறித்து வெளிப்படையாக அவர்கள் இதுவரை எதுவும்கூறாத நிலையில், சமீபத்தில் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்த மேகன், “நானும், ஹரியும் காதலிக்கிறோம்” என முதல்முறையாகத் தெரிவித்தார். அத்துடன் மேகன் தனது பிறந்தநாளை ஹரியுடன் ஆபிரிக்காவுக்குச் சென்று கொண்டாடினார். இந்த நிலையிலேயே தற்போது முதல்முறையாக ஹரியும், மேகனும் பொது நிகழ்ச்சியில் ஒன்றாக கலந்து கொள்ளவுள்ளனர்.கனடாவில் வரும் 23ஆம் திகதி தொடங்கும் விளையாட்டு நிகழ்ச்சியிலேயே இருவரும் சேர்ந்து பங்கேற்கவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## பீதியைக் கிளப்பும் இர்மா புகைப்படம்




அமெரிக்காவில் ‘இர்மா’ புயல் தாக்குவதற்கு இன்னும் சில மணி நேரமே உள்ள நிலையில் விண்வெளி வீரர் ஒருவர் ‘இர்மா’ புயலின் புகைப்படத்தை வெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.
அமெரிக்காவைச்சேர்ந்த ரண்டி ப்ரெஸ்னிக் என்ற விண்வெளி வீரர் தற்போது சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்தில் தங்கி, ஆய்வுகளில் ஈடுபட்டு வருகிறார். அட்லாண்டிக் கடலில் உருவாகி தற்போது அமெரிக்காவை நெருங்கியுள்ள இர்மா புயலை விண்வெளியில் இருந்தவாறு அவர் கவனித்து வந்துள்ளார்.
இந்நிலையில், கடலில் சுழன்றவாறு பயணம் மேற்கொள்ளும் இர்மா புயலின் புகைப்படத்தை அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.
அமெரிக்க வரலாற்றில் இர்மா புயல் மிகவும் வலிமையானது என்ற அச்சத்தில் உள்ள மக்களை, இந்தப் புகைப்படம் வெளியாகி,இர்மா புயல் மீது இன்னும் அதிக பீதியை உண்டாக்கியுள்ளது. (இ)

## பெற்றோலியக் கார்களுக்கு சீனாவில் தடை



சீனாவில் பெற்றோல் மற்றும் டீசல் போன்ற எரிபொருள்களில் இயங்கும் கார்களுக்குத் தடை விதிக்க அந்த நாட்டு அரசு ஆலோசனை மேற்கொண்டு வருகின்றது.
சர்வதேச அளவில் கார்களை உற்பத்தி செய்வதில் சீனா முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது.கடந்தாண்டில் மட்டும் 28 மில்லியன் கார்களை உற்பத்தி செய்து சீனா சாதனை படைத்துள்ளது.மேலும், எண்ணெய் வளங்களை அதிகளவில் பயன்படுத்துவதில் அமெரிக்காவுக்கு அடுத்ததாக சீனா இரண்டாவது இடத்தில் உள்ளது.
பெற்றோல் மற்றும் டீசல் கார்களை பயன்படுத்துவதால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுவதால் இதுபோன்ற கார்களின் உற்பத்தி மற்றும் வாகனக்களை உற்பத்தி செய்யவதற்கு தடை விதிக்கப்படும் என சீனா அறிவித்துள்ளது.எனினும், தடை செய்யப்படும் ஆண்டு குறித்து எவ்விதத் தகவலும் வெளியாகவில்லை.
மேலும், இந்த வாகனங்களுக்குப் பதிலாக மாற்று ஏற்பாடாக மின்சார கேபிள் கார்களை உற்பத்தி செய்ய சீனா தீர்மானித்து வருகிறது.இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(இ)



# சம்பியன்

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. இதில் ஸ்பெயினின் ரபேல் நடால் சம்பியன் பட்டம் வென்றார்.

அமெரிக்கா ஓபன் டென்னிஸ் தொடர் நியூயோர்க் நகரில் நடைபெற்றுவருகிறது. இதில் நேற்று நடைபெற்ற ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் முதல் நிலை வீரரான ஸ்பெயினின் ரபோல் நடால், 28ஆம் நிலை வீரரான தென்னாபிரிக்காவின் அண்டர்சனுடன் மோதினார்.

இதில் ஆரம்பம் முதலே ரபேல் நடால் அதிரடியாக ஆடினார். இதன் விளைவாக ரபேல் நடால் முதல் சுற்றை 6 - 3 என்ற புள்ளிக் கணக்கில் வென்றார். அதைத் தொடர்ந்து இரண்டாவது சுற்றிலும் 6 - 3 என்ற புள்ளிக் கணக்கில் வென்றார்.

3ஆவது சுற்றில் அன்டர்சன் ஓரளவு போராடினார். எனினும், ரபேல் நடால் தனது நேர்த்தியான ஆட்டத்தால் 6- 4 என்ற புள்ளிக் கணக்கில் மூன்றாவது சுற்றிலும் வெற்றி பெற்று, ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டத்தையும் வென்றார். இது அவரது 16ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவுக்கான இறுதியாட்டத்தில் அமெரிக்க இளம் வீராங்கனையான ஸ்லோன் ஸ்டீபன்ஸ் சக நாட்டவரான மேடிசன் கீசைத் தோற்கடித்து முதல் முறையாக சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். (ஐ)



# இணையத்தைக் கலக்கும் 'துப்பறிவாளன்'



மிஷ்கின் இயக்கத்தில் விஷால், அனு இம்மானுவேல், பிரசன்னா, வினய், கே.பாக்யராஜ், சிம்ரன், ஆண்ட்ரியா உள்ளிட்ட பலர் நடித்துள்ள படம் 'துப்பறிவாளன்'.

விறுவிறுப்பாக நடைபெற்று வந்த இப்படத்தின் படப்பிடிப்புகள் சமீபத்தில் முடிந்தன.

இந்நிலையில் எதிர்வரும் 14ஆம் திகதி படத்தை வெளியிடுவதற்கான பணிகளை படக்குழுவினர் செய்து வருகின்றனர்.

இதற்கிடையில் நேற்று இப்படத்தின் டிரைலர் வெளியானது. இது ரசிகர்களிடையே நல்ல வரவேற்புப் பெற்று சமூக வலைத்தளத்தில் அதிகமாகப் பகிரப்பட்டுள்ளது.

இப்படத்தில் அறிவுபூர்வமான துப்பறியும் காட்சிகள், மெய்சிலிர்க்க வைக்கும் சண்டைக் காட்சிகள், ஒரு மெல்லிய காதல் என ரசிகர்களைக் கவரும் வகையில் படம் உருவாக்கப்பட்டுள்ளது. (ஒ)




# தனி அறைக்குள் சுஜா வருணி

சக்தி, ஆர்த்தி, ஜூலி ஆகியோர் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியிலிருந்து நேற்று வெளியேறினர். இவர்களுடன் நடிகை சுஜாவும் வெளியேற்றப்பட்டதாக கமல் அறிவித்தார்.

ஆனால் அதன்பின்னர் அவரைக் கூட்டிச்சென்று ஒரு இரகசிய அறையில் விட்டனர். 'பிக்பாஸ்' வீட்டில் நடப்பதை அவர் அந்த அறையில் உள்ள ரீ.வி.யில் பார்த்துக்கொள்ளலாம். ஆனால் அவரால் வீட்டில் உள்ளவர்களிடம் பேச முடியாது.

உணவு உள்ளிட்டவை 'பிக்பாஸ்' குழுவால் சுஜாவுக்கு வழங்கப்படும். சில நாட்கள் அல்லது அரை நாள் கழித்தோ சுஜா மீண்டும் வீட்டுக்குள் அனுப்பப்படுவார் எனவும் அறிவிக்கப்பட்டது. அதனால் அவர் இன்னும் 'பிக் பாஸ்' போட்டியில் இருந்து இன்னும் வெளியேறவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது. (ஒ)



# 'வைரல்' பெண் வேண்டுகோள்

புதிதாக வெளியான மோகன்லால் நடித்த படத்தில் இடம் பெற்ற ஒரு பாடல் ஜிமிக்கி கம்மல். இந்தப் பாடலுக்குச் சில கேரளப் பெண்கள் நடனம் ஆடிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வெளியாகி அது மிகவும் வைரலாகியுள்ளது.

இந்நிலையில் அப்பாடலில் நடனம் ஆடிய ஷெர்லின் என்ற கேரளப் பெண் தமிழ் இளைஞர்களிடையே பிரபலமாகிவிட்டார்.

ஷெர்லின் தன்னுடைய இன்ஸ்டாகிராம் பக்கத்தில், "உங்களின் ஆதரவுக்கு நன்றி, அதுவும் தமிழ் மக்கள். நீங்கள் அனிதா பிரச்சினைக்கு ஆதரவு தர வேண்டும்" என்று பதிவு செய்துள்ளார்.

# விட்டதை பிடித்த முருகதாஸ்

விஜய், காஜல் அகர்வால் ஜோடியாக நடித்த துப்பாக்கி படத்தை ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கியிருந்தார். தற்போது தெலுங்கு நடிகர் மகேஷ் பாபுவை வைத்து ஸ்பைடர் படத்தை இயக்கியிருக்கிறார்.

இதன் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடந்தது. இதில் ரசிகர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதில் பேசிய முருகதாஸ்,

"பத்து வருடங்களுக்கு முன் மகேஷ் பாபுவின் 'ஒக்கடு' படத்தைப் பார்த்தேன். 3 வாரங்களாகியும் ஒரு திருவிழா போல இருந்தது.

பிறகு துப்பாக்கி படத்தை அவரை வைத்து தயாரித்து இயக்க வேண்டும் என்று திட்டம் போட்டேன். ஆனால் அது இப்போது தான் நடந்திருக்கிறது என கூறினார்.(ஒ)

# யாழின் கில்லாடிகள் யார்? உதைபந்தாட்டத் தொடர் ஆரம்பம்











அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் 'யாழில் கில்லாடி யார்?" உதைபந்தாட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகியது.

அரியாலை உதைபந்தாட்ட பயிற்சி மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டங்களில்,

றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் 3:1 என்ற கோல் கணக்கில் இருதயராசா விளையாட்டுக் கழகத்தையும், கலைவாணி விளையாட்டுக் கழகம் 4:0 என்ற கோல் கணக்கில் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தையும், குறிஞ்சிகுமரன் விளையாட்டுக் கழகம் 1:0 கோல் கணக்கில் ஞானகலா விளையாட்டுக் கழகத்தையும், ஹென்றீஸ் விளையாட்டுக் கழகம் 2:0 என்ற கோல் கணக்கில் யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகத்தையும், பாடும்மீன் விளையாட்டுக் கழகம் 5:0 என்ற கோல் கணக்கில் சரஸ்வதி விளையாட்டுக் கழகத்தையும், அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 4:2 என்ற கோல் கணக்கில் உதய சூரியன் விளையாட்டுக் கழகத்தையும் வீழ்த்தி அடுத்த சுற்றுக்குத் தெரிவாகின. (ஐ)



# இந்தியா ஒத்துழைக்கும்; பிரதமர் மோடி தெரிவிப்பு

இலங்கையின் அபிவிருத்தி மற்றும் சுபீட்சத்துக்காக இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமென்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பனவை இந்தியப் பிரதமர் முதன் முறையாகச் சந்தித்த போது, இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு இரு நாடுகளும் மேலும் நெருக்கமான முறையில் செயற்பட வேண்டுமென்றும் மோடி குறிப்பிட்டார். இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் நல்வாழ்த்துக்களை பிரதமர் நரேந்திர மோடியிடம் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தெரிவித்தார். இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்று வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன குறிப்பிட்டார்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் திலக் மாரப்பன, தமது அமைச்சுப் பதவியைப் பொறுப்பேற்ற பின்னர் மேற்கொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயம் இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# இன்றைய கருத்தோவியம்




நன்றி - அவந்த ஆட்டிக்கல

# வெற்றிலையில் போட்டியிட கட்சிகளுடன் பேச்சு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, சிறுபான்மையினக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு, எதிர்வரும் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின், வெற்றிலைச் சின்னத்தில் களமிறங்குவதற்கு, பேச்சுநடத்தி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற, தமிழ் அரசியல் கட்சிகள், கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற, முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஆகியனவற்றுடன், தற்போதைக்கு பேச்சுகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாக கட்சியின் உள்ளக தகவல் தெரிவிக்கின்றது. தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கையை கவனத்தில் கொண்டே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, இவ்வாறு களத்தில் குதித்துள்ளதாகவும் அறியமுடிகின்றது. இதேவேளை, எந்தக் கட்சியுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டாலும், நிபந்தனைகள் இன்றியே, கூட்டுச்சேர்த்துகொள்வதற்கு, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. (உ)

# பொதுக் கூட்டம்

யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் ஒன்றியத்தை சமாசமாக மாற்றம்செய்தலும் நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது. காலை 9 மணிக்கு யாழ். வீரசிங்கம் கூட்டுறவு மண்டபத்தில் ஒன்றியத்தின் தலைவர் ந.பிரபாகரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்னோல்ட் கலந்துகொள்ளவுள்ளார். (உ)

# பாடசாலை வளப்பற்றாக்குறை ஹக்கீமுடன் கலந்துரையாடல்



கண்டி சித்திலெப்பை மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திக்குழுவினர் நகரத்திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீமை சந்தித்தனர். நேற்று இடம்பெற்ற இந்த சந்திப்பின் போது பாடசாலையின் பௌதீக வளப்பற்றாக் குறைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இப்பாடசாலை மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் வருவதால், எதிர்வரும் 14ஆம் திகதி பாடசாலை அபிவிருத்திக்குழுவுடன் மாகாண சபை முதலமைச்சரை சந்தித்து இதற்கான தீர்வை பெற்றுத் தருவதாக அமைச்சர்ரவூப்ஹக்கீம்இதன்போது உறுதியளித்தார். (உ)

## இலங்கைத் தளபதிகள் குடும்பம்

# வியட்னாம் தீவில் தடுத்துவைப்பு

இலங்கையின் ஓய்வுபெற்ற மூத்தபடைத் தளபதிகளும் அவர்களின் மனைவிமாரும், வியட்னாமில் உள்ள தீவு ஒன்றில் கடந்த வாரம் தடுத்து வைக்கப்பட்டதாக கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பிரிகேடியர் மற்றும் அதற்கு மேற்பட்ட பதவிநிலையில் இருந்து ஓய்வுபெற்ற படை அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த, நான்கு நட்சத்திர ஜெனரல்கள் இருவர் உள்ளிட்ட மூத்த படை அதிகாரிகள் மற்றும் அவர்களின் மனைவிமார் என 65 பேர், வியட்னாமுக்கு சுற்றுலா சென்றிருந்தனர். சைகூனில் உள்ள மூன்று நட்சத்திர விடுதி ஒன்றில் தங்குமிட வசதிகளுடன், இந்தப் பயணத்துக்கு, 120,000 ரூபாவை பயண முகவர் அறவிட்டிருந்தார். எனினும், அவர்களுக்கு அங்கு தங்குவதற்கு விடுதி நிர்வாகம் அனுமதி மறுத்து விட்டது. ஆளுக்குத் தலா 100 டொலரை செலுத்தாவிடின், தீவை விட்டு வெளியேறுவதற்கு படகு தர முடியாது என்றும் விடுதி நிர்வாகம் கூறியுள்ளது. பயண முகவர் பின்னர், கட்டணத்தைச் செலுத்துவார் என்று முன்னாள் படை அதிகாரிகள் கூறிய போதும், விடுதி நிர்வாகம் அதனை நிராகரித்து விட்டது. தீவை விட்டு வெளியேறுவதானால், 100 டொலரைச் செலுத்த வேண்டும் என்று அவர்களின் கடவுச் சீட்டை வைத்துக் கொண்டு விடுதி நிர்வாகம் மிரட்டியுள்ளது. இந்த நிலையில், அவர்கள் வியட்னாமில் உள்ள இலங்கை தூதரகத்துடன் தொடர்பு கொண்டு முறையிட்டனர். இதையடுத்து, தூதரகம் தலையிட்டு,கட்டணம் செலுத்துவதற்கு தாம் பொறுப்பேற்பதாக கூறியதை யடுத்தே, அனைவரும் விடுவிக்கப்பட்டனர். (உ)

# மழை!

நாட்டின் தற்பொழுது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை எதிர்வரும்14ஆம் திகதி வரை தொடர்ந்து நீடிக்கக்கூடுமென்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. நாட்டின் பல பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பிற்பகல் 2 மணியின் பின்னர் பெய்யும். குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்கள் மற்றும் காலி , மாத்தறை, இரத்தினபுரி, முல்லைத்தீவு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் மணிக்கு சுமார் 75 மில்லிமீற்றர் கன மழை பெய்யக்கூடும் என்று திணைக்களம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. கொழும்பிலிருந்து காலி ஊடாக மாத்தறை மற்றும் திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவினூடாக காங்கேசன்துறை வரையிலான கரையோரத்துக்கு அப்பாலான கடல் பிரதேசத்தில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும். இடியுடன் கூடிய மழையின்போது இந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாகக் கடும் காற்று வீசக்கூடும் இடி மின்னல்தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன்செயற்படவேண்டுமென்று திணைக்களம் வலியுறுத்தியுள்ளது. (உ)

## வைத்தியர்களின் பிரச்சினைகளுக்கு

# தீர்வுகாண நடவடிக்கை

பாரம்பரிய வைத்தியர்களைப் பதிவு செய்யும்போது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார். ஐந்து வருடத்துக்கு ஒருமுறை 1500 ரூபாவைச் செலுத்தி, பாரம்பரிய வைத்தியர்கள் ஆயுர்வேத சபையில் பதிவு செய்துகொள்ள வேண்டும். அந்தப் பணத்தை செலுத்த முடியாத நிலையில் வைத்தியர்கள் இருப்பதாக இந்த சந்திப்பில் தெரிய வந்ததை அடுத்து, அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. ஐக்கிய சுதேச வைத்தியர் சங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு அமைய, பாரம்பரிய வைத்தியர்கள் 70 வயதுக்கு மேற்பட்டிருப்பார்களாயின் கட்டணத்தை அறவிடாமல் இருப்பதற்கும், கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர்களின் அனுமதியுடன் இவ்வாறான வைத்தியர்களின் கட்டணத்தை அறவிடுவதிலிருந்து விடுவிப்பதற்கு அமைச்சர்டாக்டர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார். (உ)

# மத்தியும் மாகாணமும்

## இணைந்தால்தான் அபிவிருத்தி

மத்திய அரசாங்கமும், மாகாண அரசாங்கங்களும்இணைந்து செயற்படுவதன் ஊடாக மட்டுமே, அபிவிருத்தியின் உரிய இலக்கை அடையமுடியும் என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சரும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாட் பதியுதீன், அதுவே காலத்தின் கட்டாயமாகும் என்றும் குறிப்பிட்டுள்ளார். உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் 'நிலமெகவர' வேலைத்திட்ட ஜனாதிபதி நடமாடும் சேவை மன்னார், நானாட்டான் பிரதேச செயலகத்தில் இடம் பெற்றது. இதில், பிரதம விருந்தினராக அமைச்சர் கலந்து கொண்டார். அமைச்சர் அங்கு உரையாற்றிய அவர்,"அபிவிருத்தியென்று வரும் போது அங்கே, அரசியல் நலன்கள் மையமாக இருக்கக் கூடாது. தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் தமது அரசியல் செயற்பாடுகளையும் கொள்கைகளையும் மக்களிடம் கொண்டு செல்லலாம். அபிவிருத்தியில் அரசியல் சாயத்தை நாம் பூச முற்பட்டால் பாதிக்கப்படுவது பாமர மக்களே" - என்றார். (உ)

# நாளை நாளும் கோளும்

12.09.2017 செவ்வாய்க்கிழமை ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம் 27 ஆம் நாள்

சப்தமி பி.ப. 02.12 வரை | கார்த்திகை மு.ப. 09.54 வரை | சித்தாமிர்தயோகம் | ஸ்ரீகிருஷ்ணஜெயந்தி

இராகுகாலம் 03.03 - 04.33 | சுபநேரம் 10.33 - 12.03 | எமகண்டம் 09.03 - 10.33

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆக்கம் | அச்சம் | ஒய்வு | புகழ் | இரக்கம் | ஊக்கம் | தனம் | நலம் | வெற்றி | தெளிவு | இன்பம் | இலாபம் |

எதிரொலி
Ethiroli

## அந்த நாள் ஞாபகம்.....!


இந்து சாதனம்

**1889.09.11**

யாழ்ப்பாணத்தில் இந்து சாதனம் (The Hindu Organ) என்ற ஆங்கிலப் பத்திரிகை டி. பி. செல்லப்பா பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்டது.

# கோரமின்மையால் கிழக்கு அவை ஒத்திவைப்பு



20ஆவது திருத்தச் சட்ட மூலம் தொடர்பாக இன்று காலை 9.30 மணிக்கு அவசரமாகக் கூடிய கிழக்கு மாகாண சபை, கோரமின்மையால் இரு தடைவைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண சபையின் அமர்வு, தவிசாளர் சந்திரதாச கலப்பதி தலைமையில் இன்று கூடிய போதும் ஆளும் தரப்பு உறுப்பினர்களின் வரவு மிகக் குறைவாகக் காணப்பட்டதையடுத்து, தவிசாளரால் 11 மணிக்கு கூடுவதாக ஒத்தி வைக்கப்பட்டது. எனினும் மீண்டும் சபை கூடியபோதும் கோரமின்மையில் பகல் ஒரு மணிக்கு கூடுவதற்காக ஒத்திவைக்கப்பட்டது.

கிழக்கு மாகாண சபையின் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்கள், அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்ட மூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்ற நிலையில், ஆளும் கட்சி உறுப்பினர்களும் தமது வருகையைத் தவிர்த்து மறைமுக ஆதரவு வழங்குவதைக் காண முடிந்தது. கிழக்கு மாகாணசபை இன்றையஅமர்வில் எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் நால்வர் மாத்திரமே சமுகமளித்திருந்தனர். (உ)

## அதிரடிப்படைச் சீருடை வவுனியாவில் மீட்பு



வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் இன்று காலை இராணுவத்தினர் பயன்படுத்தும் இராணுவச் சீருடை வீதியிலிருந்து மீட்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். வவுனியா தேக்கவத்தைப்பகுதியில் 9ஆம் ஒழுங்கையில் வீதியில் கைவிடப்பட்ட நிலையில் விசேட அதிரடிப்படையினரின் சீருடை இருப்பதாகப் பொலிஸா ருக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவற்றை மீட்டதுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். குறித்த இராணுவச் சீருடை மற்றும் விசேட அதிரடிப்படையினரின் இலச்சினை என்பன சட்ட விரோத நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இதனடிப்படையில் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (உ)

## சிவபாலனின் நினைவு தினம்



முன்னாள் யாழ். மாநகர முதல்வர் பொன். சிவபாலனின் நினைவு தினம் இன்று காலை தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்றது. (உ)

### முருகானந்தாக் கல்லூரி ஆய்வு கூடத்தில்
## தீ விபத்து

முரசுமோட்டை முருகானந்தாக் கல்லூரியில் மஹிந்தோதயா ஆய்வு கூடத்தில் மின் ஒழுக்குக் காரணமாக தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இன்று பாடசாலை நேரத்தில் இந்த விபத்து நிகழ்ந்தமையால் மாணவர்கள், மற்றும் ஆசிரியர்கள் இணைந்து தீயை அணைத்து விபத்துப் பாதிப்பை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்தால் பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்கள் அழிவடைந்துள்ளன. மஹிந்தோதயா ஆய்வுகூடம் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் பாடசாலைகளுக்கு கட்டிக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

**வாக்களிப்பு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேர்தல் முடிவுகள், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அனுப்பப்பட்டு, முடிவு மீள் ஆய்வு செய்யப்படும். அதன் பின்னரே, தேர்தல் முடிவுகள், தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பப்படும். அதனையடுத்து, தேர்தல் ஆணையம், முடிவுகளை சம்பந்தப்பட்ட பிரிவு வாரியாக அறிவிக்கும். இந்த ஆண்டு இறுதியில் அல்லது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் இந்த நடைமுறை கடைப்பிடிக்கப்படவுள்ளது. (எ)

**20ஆவது...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சரவை அங்கீகாரமும் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலிலும் சேர்க்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

**அரசா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டு மக்களை ஏமாற்றிவருகின்றது. சரத் பொன்சேகா மற்றும் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஊடாக இரட்டைத் துரோகத்துக்கான காய்களை நகர்த்திவருகின்றது. படையினரையும் படைத்தளபதிகளையும் சரத் பொன்சேகா மூலமாக குற்றவாளிகளாக்க அரசாங்கம் முயற்சித்துள்ளது. இதன் மூலம் ஐக்கிய நாடுகளில் நல்லபிள்ளை பெயர் எடுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது. இதேபோல வடக்கு மாகாண முதலமைச்சர் விக்கினேஸ்வரனை மகாநாயக்கர்களிடம் தூதனுப்பி காரியம் சாதிக்கப்பார்க்கின்றது.
மகாநாயக்கர்களின் மனதை மாற்றி சுய நிர்ணய உரிமையை வழங்குவதற்கும் பின்னர் தனிநாட்டை உருவாக்கிக் கொடுப்பதற்கும் அரசாங்கம் சதி செய்கின்றது.”
- என்றார். (எ-09)

**பூநக...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மற்றும் மழை சறுக்கல் காரணமாக விபத்துக்குள்ளாகி தடம்புரண்டதாக தெரியவருகின்றது. ஹயஸில் பயணித்த அனைவருக்கும் சிறு காயங்கள் ஏற்பட்டிருப்பதாக தெரியவருகின்றது.

**முதல்வ...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவற்றை அடிப்படையாக வைத்தே, சி.விக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவதற்கு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகின்றது.

முதலமைச்சரின் செயற்பாட்டினால், தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியில் இருப்பதாகவும் கருத்துகளை வெளிப்படையாக தெரிவிக்கமுடியாமல் அவர்கள் இருப்பதாகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்ட நிலையிலேயே அவருக்கு எதிராக பிரேரணை கையளிப்பது என முடிவு செய்யப்பட்டதாக தெரியவருகின்றது. (எ)

**விடுத...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எமது போர் வீரர்கள் எவரையும் கைது செய்வதற்து நல்லாட்சி அரசாங்கம் அனுமதிக்காது. போர் வீரர்களை போர்க்குற்ற நீதிமன்றத்தில் நிறுத்தி மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்லப் போவதாக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சிலர், கூச்சலிடுகின்றனர். அவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். அவர்களின் நோக்கம் போர் வீரர்களைப் பாதுகாப்பது அல்ல. மீண்டும் அதிகாரத்துக்கு வருவதற்கான வாக்குகளைப் பெறுவதே அவர்களின் நோக்கம்.” - என்றார். (எ)

IMMEDIATE VACANCY
Dharmadasa Construction & Enterprises
Tel: 011 2815317 / 011 2829947

A well reputed construction firm has seeking vacancy for immediate enlistment

**TECHNICAL OFFICER** - Mallavi site
- NCT/NDT/HNDE - Civil with 5 year experience in building construction.

Please send your CV to following email address :
dcecons@yahoo.com
and indicate the position applied as the subject of your mail.
OR
Sent your CV to the following address with mention of the post you applied on the top of the post.

Administration Officer,
No.40, Old Kesbewa Road,
Gangodawila,
Nugegoda.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 11.09.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.